# எம்மை உமது கருவியாய் மாற்றிடு தேவா

எம்மை உமது கருவியாய் மாற்றிடு தேவா
உமது ஆவி ஆற்றலோடு நடத்திடு தேவா – 2

**1)**
உள்ளம் உடைந்தவர் உருக்குலைந்தவர்
உமதாற்றல் பெற்றிட வேண்டும்
உறவை இழந்தவர் ஒதுக்கப்பட்டவர்
உன் துணையில் எழுந்திட வேண்டும்
இருளினை அகற்றவும்
விலங்கினை உடைக்கவும் - 2
நீதி நேர்மை உணர்வு ஓங்க
நிம்மதியே வாழ்வில் தொடர
எம்மை உமது கருவியாக்கும் -2

(எம்மை உமது கருவியாய்)

**2)**
மனித நேயங்கள் மதிக்கும் பண்புகள்
மனதில் தினம் வளர்த்திட வேண்டும்
இறைவன் வார்த்தையில் இனிதோர் ஆட்சியை
இம்மண்ணில் கட்டிட வேண்டும்
பிரிவுகள் நீங்கவும் ஒற்றுமை ஓங்கவும் -2
உண்மை அறிவு எங்கும் ஆள
உரிமை வாழ்வு நிறைவுகாண
எம்மை உமது கருவியாக்கும் -2

(எம்மை உமது கருவியாய்)